

சுதுமலையை பிறப்பிடமாகவும்,
கனடா, மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

# ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை செல்லத்துரை

அவர்களின் மறைவு குறித்து
வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

எங்கள் இதயத்தில் விழுந்த வெட்டு - இந்த கல்வெட்டு

05.09.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் ஸ்ரீமான்
# கணபதிப்பிள்ளை செல்லத்துரை
# அவர்களின்
# 31ம் நாள் நினைவுமலர்



மண்ணுக்கு:-
27-05-1922

விண்ணுக்கு:-
06-08-2002

## திதி வெண்பா

சீர்மருவும் சித்திரபானு ஆண்டில் வந்த ஆடிச்செவ்வாய்
கார் படிந்த நித்திலத்தின் திரியோதசி திதியதனை தேடிச்சென்றாய்
உற்றதொரு பாச, பந்தம் உடைகளெனக் களைந்து விட்ட எங்கள் ஐயா,
பற்றறுத்துப் பரமபதம் சேர்ந்துவிட்ட செல்லத்துரை அமரரெனக் காண்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எமது அன்புத் தெய்வத்தின் திருவடித் தாமரைகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்



மனிதருள் மாணிக்கமாய்,
அன்பு நிறைந்த பேரொளியாய்,
இன்சொற்பேசி,
அன்புடன் எம்மைப்பேணிக்காத்து,
அனைவருடனும்
பாசத்துடனும், நேசத்துடனும்
இன்முகத்தினனாய் வையகத்தில்
இறுதிவரை
வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தந்தையின்
திருப்பாதங்களுக்கு
இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-குடும்பத்தினர்

---

"எங்கள் இதயத்தில் விழுந்த வெட்டு - இந்த கல்வெட்டு"

ஆக்கியோன்: திரு. ஆ. சிறிஸ்கந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கணபதி துணை



# விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



## தேவாரம்

### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

நம்புவாரவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
சம்பொ னார்தில கம்உல குக்கெலாம்
நம்மன் நாமம் நமச்சிவாயவே.

வேயுறு தோளிபங்கள் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடுடைய செவி யன்விடை ஏறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுட லைப்பொடிபூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனைநாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மானிவ னன்றே.

கூற்றாயின வாறுவிலக் ககலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறைஅம் மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

பொன்னார் மேனியனே
புலித்தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன் றையணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகி
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்பொது நடம்போற்றி! போற்றி!

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக் கண்டதினாலே
மால் கொண்ட பேதைக்குள் மணம்நாறும்
மார்தங்கு தாரை தந்தருள்வாயே
வேல்கொண்டு வேலைப் பண்டெறிவோனே
வீரங்கொள் சூர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நான் என்று மார்தட்டும் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம்என்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி - வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பணியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

கற்பாந்த காலங் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவா சகங் கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவாச கம்என்னும் தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ புவனேஸ்வரி மாலை

மந்திர ஒலியே மங்கள இசையே
மன்மத பாணியளே
சந்திர கேசரி சண்முகன் தாயே
சங்கரி சௌந்தரியே
இந்திர ஜாலம் தந்திர மாயம்
இலங்கிடு விழியவளே
பொங்கிட என்றும் புன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

பந்தனை விரலி பர்வத தேவி
பவபய ஹாரிணியே
சுந்தர ஈசன் சுருதியும் நீயே
சுக சுக ரூபிணியே
சிந்தனை யாவும் உன்னிடம் வைத்தேன்
சித்தியின் ஒருவடிவே
எந்தனைக் காக்க எழில்நகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

சத்திய வடிவே சத்குண உருவே
சதுர்மறை சன்னிதியே
நித்திய நிதியே நிறைபுகழ் ஒளியே
நினைத்திட வருபவளே
வைத்திய மணியே வறுமைகள் போக்க
வையகம் வாழ்பவளே
புத்தியுள சேர்ந்து புன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

வழிபடு வோர்க்கு வரந்தரு தாயே
வந்தருள் வேணியளே
பழிபடு துயரம் பகைதரு தீமைப்
பகைகளைப் புதைத்தவளே
விழிகளின் அருளால் வினைகளை விரட்ட
விளக்கொளி யானவளே
பொழிந்திடு அருளாய்ப் புன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து நான்கு கலைகளுமாமானாய்
அன்னையும் நீயானாய்
கறுவிடு அரக்கர் கண்பகை கடிந்த
கனிமொழி நீயானாய்
குறுகலர் தம்மைக் குறுந்தடி பாய்ச்சும்
குணமணி நீயானாய்
மறுவுகள் போக்க மங்கலம் பூத்த
புவனேஸ்வரி தாயே!

வல்லவள் நீதான் வஞ்சியும் நீதான்
வசந்தமும் நீயேதான்
நல்லவள் நீதான் நன்னிதி நீதான்
நற்சுனை நீயேதான்
சொல்லவள் நீதான் சொர்ணமும் நீதான்
சொர்க்கமும் நீயேதான்
நல்வையம் காக்க நலநகை பூத்த
புவனேஸ்வரி தாயே!

நாற்பத்தி மூன்று கோணத்தின் நடுவில்
நான்மறை நீநவின்றாய்
நோற்றிடும் நோன்பின் பலனென வந்தாய்
நோய்களை நீதீர்த்தாய்
கார்மழை யானாய் காவலும் ஆனாய்
காத்திட நீவந்தாய்
சீர்வையம் காக்க சீவனில் பூத்த
புவனேஸ்வரி தாயே!

ஜெய ஜெய புவன ஈஸ்வரி தாயே
ஜெய ஜெய ஸ்ரீங்காரி
ஜெய ஜெய மாயா மங்கள ரூபி
ஜெய ஜெய ஹ்ரீங்காரி
ஜெய ஜெய துர்க்கா சண்டிகை காளி
ஜெய ஜெய க்லீம்காரி
நயனங்கள் தன்னில் நன்னகை பூத்த
புவனேஸ்வரி தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகளால் தில்லையில் அருளிச் செய்யப்பட்ட திருப்பொற் சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்!
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே!

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியா னாதனல் வேலன்றாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே!

காசணிமின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடையஅடிய வர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுநிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றி மற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் பேதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டு கொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே!

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே!

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொனு லக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப் பொற்சுண்ண மிடித்துநாமே!

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே!

மையவர் கண்டமை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே!

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே!

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே!

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுந் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே!

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே!

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே!

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே!

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்துநாமே!

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துக்க நிவாரண அஷ்டகம்

## (துர்க்கை சித்தர் அருளியது)

மங்கள ரூபிணி மதியணி சூலிணி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே!
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபா கரி
துக்க நிவாரணி காமாட்சி.

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி.

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலந் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்த நல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி.

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்த நல்குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி.

எண்ணியபடி நீயருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி.

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்
படர்தரு இருளில் பாதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி.

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குமரகுருபர சுவாமிகள் அருளிய
# சகலகலா வல்லிமாலை

### உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

### நாற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

### கலைமகள் அருளிய குளிக்க விரும்புதல்

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்**

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணிந்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

**நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்**

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

**பண்ணும் பரதமும் நல்கிட வேண்டும்**

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

**பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்**

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே

**சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்**

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

**சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்**

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே

**மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்**

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால் வழிபாடு

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர்
ஆயின் எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும் அருளோடு
பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற தாயினும்
ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லைநான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே
ஆயர்தம் கொழுந்தே இன்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என்
உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி
அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்
மற்றொன்றினைக் காணாவே.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்க்கை வரலாறு

ஆசிரிய விருத்தம்

சுவாசத்திலும் இரத்தத்திலும் கலந்துவிட்ட பூமி
தமிழீழ மண்ணில்
சுகவாசம் செய்து நிற்கும் மலைவேம்பும் கிளையசைத்து
நட்பைக் காட்டும்
துயில் மறந்த கதிரசைந்து வயல்வெளிகள் தென்றலுடன்
ஊடல் செய்யும்!
வானளந்த பனைமரங்கள் தேனளந்த பூமி காக்க
குடைபிடிக்கும்!
அவனியிலே அத்தனையும் காத்து நிற்கும் புவனேஸ்வரி அம்மன்
பள்ளிகொண்ட ஊராம்
சுதுமலையில் பிறந்திட்டார் கணபதிப்பிள்ளை - அரியமுத்து
ஈன்றெடுத்த அரியமுத்து
மூத்தவராய் செல்லத்துரை உடன் பிறந்த தம்பிராசா,
இராசலிங்கம்
பின்வந்த பெண்ணணங்கு கனகம்மா குடும்பந்தனை
நிறைத்து நின்றார்
பள்ளிப் பருவந்தனை சுதுமலையில் பயின்றுநின்ற
செல்லத்துரை
பதின்பருவம் வந்தவுடன் பல்வேறு கலைகளில்
கால் பதித்து நின்றார்
வீறுகொண்ட காளைதனை வண்டில் கட்டி அதிவேக சவாரி
தனில் பங்கும் ஏற்றார்
போரடித்த நெற்கதிரின் இழைகள் போட்டு வான்முட்டும்
திறனறிந்து ஊரும் கேட்கும்
விவசாயம் செய்வதிலே மட்டுமல்ல விதை நெல்லை
வீசுதலிலும் புதுமை செய்தார்
விசேட பதக்கமுடன் சான்றிதழும் (1945) அரசாங்க
விருதாகப் பெற்றே நின்றார்
செல்லத்துரை - ஆச்சிப்பிள்ளை பெற்ற செல்வி
மனோன்மணியைக் கரம்பிடித்தே மேன்மை பெற்றார்
இல்லறக் கடலில் மூழ்கி பெற்ற மக்கள் விக்கினேஸ்வரி,
ஜெயசீலன், ஜெகதீஸ்வரியுடன்
கமலேஸ்வரி, சிவசீலன் நன்முத்துக்கள் குலம் தழைத்து
விளங்க வந்த சுடர் முத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோன்மணியின் பிறந்த மண்ணாம் தாவடியில் - மனை
விளங்க குடும்பத்துடன் கழித்த நாட்கள்
விரைவெடுத்து பறந்த பின்னர் தமிழீழம் நீங்கி
கனடாவில் கால்பதித்தார் கனவு தேக்கி
தலையெடுத்த தலைமகனாம் ஜெயசீலன் ஜெயித்ததனால்
விடை கொடுத்தார் ஈழத்திற்கு கனடாவின் குடியாய் ஆனார்
முன்னவளை வரித்ததினால் முதல் மருகன் ஆகிவிட்ட
தேவராஜா
முன்னவனை மணந்ததனால் நன்மருகள் ஆகிவிட்ட
நித்தியதேவி
ஜெகதீஸ்வரி மாலையிட்டு மாண்புநிறை மருகனான
உதயகுமார்
கமலேஸ்வரி தனைமணந்த தங்கநிகர் மருமகனாம்
தவராஜ் ஆக
இளையவனாம் சிவசீலன் கைப்பிடித்து சிறந்த மருமகள்
பாமினி ஆனாள்
செல்லத்துரை - மனோன்மணி இல்லற விருட்சத்தின்
விழுதுகள் ஊன்றிட
வெல்லமென இனித்த வாழ்வில் அள்ளிவந்த ஆர்வங்கள்
சொல்லில் விழா
உடல்வாகு கொண்ட திடமான நெஞ்சுடையான்
நோய் துன்பம் என்று ஒருநாளும் படுத்தறியான்
உடற்பயிற்சி செய்வதையும் உண்பதையும் வரையறுத்து
கடல் கொண்ட எண்ணத்தை காலத்தில் பதிவு செய்தான்
அடிவயிற்றில் வலியெடுத்து ஆஸ்பத்திரிக்குப் போனபின்தான்
இடி தாங்கும் இதயம் கொண்டோம் காலன் நாட்குறித்ததனால்
புதுமை விரும்பும் எங்கள் புன்சிரிப்பு வேந்தன்
பதுமையாய் உறங்கிவிட்டார் புண்ணுடலைக் களைந்து விட்டார்

## தேற்றம்

கண்பட்ட பொலிவு கண்டு காலனவன் புன்னகைத்தான்
புண்பட்ட மேனி தன்னை புரிந்தவனே புறக்கணித்தான்
மண்ணில் உடல் விடுதல் உயிரதற்கு புதியதல்ல
பண்படுவோம், ஆறிடுவோம் - ஆத்மா சாந்திபெற.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- திரு. ஆ. சிறிஸ்கந்தராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்:

## மனைவிளங்க வந்த மனோன்மணியிடமிருந்து....

ஏற்றார் எனை ஏந்தி இல்லத்தில் விளங்க வைத்தார்
மாற்றார் மதிப்பளித்து மாண்புடனே சிறக்க வைத்தார்
தோற்றார் காலனிடம் காற்றாகிக் கலங்க வைத்தார்
ஆற்றாத துன்பமய்யா எனைத் தேற்றுவது யார் துரையே!

நடைதனில் நாட்டம் கொண்ட நண்பராய் பலரைப் பெற்றீர்!
உடைத்த என் கண்ணீர் கட்டி உயிர்காக்க நேர்த்தி வைத்தேன்
படைத்த நின் நோயை வெல்ல பாவிநான் கடமை செய்தேன்
அடைக்கலம் தந்த தேசம் என்னை அனாதையாய்
செய்ததய்யா!

தலை வலித்துப் படுத்தாலும் உன் உயிர் வலிக்க வருவாயே!
களை விழுந்த முகத்தோடென்னை கரிசனமாய்ப் பார்ப்பாயே!
மலை நிகர்த்த இன்னலையும் நீ அருகிருந்தால் சகிப்பேனே!
நிலை குலைந்தேன் தாங்குவனோ! உன் தரிசனத்தைக்
காண்பதெப்போ?

குற்றமில்லா வாழ்வு தந்தீர் - குலம் விளங்க மக்கள் தந்தீர்!
வற்றாத அன்பு தன்னைப் பிள்ளைகள்மேல் படரவிட்டீர்!
கொற்றம் குடைவிழுந்து என் கோலமெல்லாம் அழிந்ததய்யா!
முற்றம் சிவக்க இன்று முகம்மூடிக் கலங்க வைத்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள்: விக்கினேஸ்வரி, ஜெயசீலன், ஜெகதீஸ்வரி, கமலேஸ்வரி, சிவசீலன்

மண்ணில் உயிரளித்து பண்பட்ட வாழ்வு தந்தீர்!
எண்ணில் கருமங்களை எடுத்தியம்பி உலவ வைத்தீர்
விண்ணில் பறந்திடவோ புண்பட்ட உடலை விட்டீர்
கண்ணில் உடைத்ததய்யா பாசத்தின் மடை வெள்ளம்.

தொட்டிலில் எமை ஆட்டி தோள்களில் தூக்கி வைத்து
கட்டியம் கூறி எம்மை களிப்பிலே ஆக்கி வைத்து
தொட்ட நல்லறிவுதேடி கனவுகள் சேர்த்த ஐயா - உமைக்
கட்டிலில் கண்ட காட்சி கனவாகப் போய்விடாதோ!

பிள்ளைகள் வருவார் என்று வாசலில் காத்து நின்றீர்!
பேரச் செல்வங்களுடனே சேர்ந்து பேசியே களித்து நின்றீர்!
நோயென்று படுத்தறியா சீரான சுகத்தைப் பெற்றீர்!
பாயில் விழுத்திடவோ கொடுங் காலன் படையெடுத்தான்.

## மருமக்கள்: தேவராஜா, நித்தியதேவி, உதயகுமார், தவராஜ், பாமினி

இளவல்போல் உலவிவந்து
இதயத்தில் அமர்ந்த மாமா! - நின்
உடல் விழுந்த செய்திகேட்டு
செயலிழந்து போனதையா!
பழமைகளின் பண்புடனே
புதுமைகளை ஏற்றவர் நீர்!
வயதான வேளையிலும்
பிறமொழியறியும் ஆர்வலர் நீர்!
உன் செயலில் வயதறியோம்
புன்சிரிப்பில் புலனறியோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவப் பெட்டகம் நீர்
இனியெங்கு முறைகள் கேட்போம்
நீர் படுத்திருந்த பேழைதனை
எடுத்து நாம் சுமந்தவேளை
விடுத்தெம்மை போனதனால்
தோளும் விறைப்பாகிப் போனதையா!

## பேரப்பிள்ளைகள்: யதுர்ஷன், யாழினி, ஜனனி, ஜனகன், மகீரன், யசீனா, மிதுனன்

ஆசையோடு ஓடிவந்தால்
பாசமாய் அணைத்த தாத்தா!
நேசவிழி திறந்து நோகும் -
எமைப்பாரும் ஐயா!
கட்டியணைத்து எம்மை
களிப்புடனே தந்த முத்தம்
பட்டு உலருமுன்னே
படுக்கையிலே போட்டது யார்?
உம் பின்னால் நாம் மகிழ்ந்து
உலவி வந்த நாட்கள் - இனி
எந்நாள் கிடைத்திடுமோ!
ஏங்குதையா எங்கள் மனம்
தாத்தா வரும்போது
என்ன பொருள் கொண்டு வந்தார்?
மூடி வைத்த கைகளுக்குள்
என்னதான் வைத்திருப்பார்?
வித்தை பல காட்டி
விரும்பும் பொருள்தந்த தாத்தா!
மெத்தென சரிந்ததுமேன்?
எங்கள் செல்லமும் கசந்ததுவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்களை நினைந்துகொள்ளுகின்றோம்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திய
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

## கணபதிப்பிள்ளை செல்லத்துரை

அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து எங்கள் இல்லங்களுக்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

அஞ்சலி மண்டபத்தில் அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி முதலியவற்றில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும்,

இந்த மலரை ஆக்குவதற்கு பெரும் உதவிகள் புரிந்த திரு. ஆ. சிறிஸ்கந்தராஜா அவர்களுக்கும்,

அமரரின் இறுதி நாட்கள் முதல் இன்னாள் வரை எங்களது சோகத்தில் சமபங்குகொண்டு உதவிகள் புரிந்த திரு. ஆ. சிறீஸ்கந்தராஜா குடும்பத்தினருக்கும்,

இம்மலரை அழகுற அச்சமைப்புச் செய்த செல்வா ரைப்செற்றிங் கிருபா அவர்களுக்கும்,

தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

11605 Saint Evariste # 401
Montreal, Que. H4J 2N6

260 Wellesley St. # 1814
Toronto, Ont. M4X 1G6

சிவா: (514) 332-7596

சீலன்: (416) 972-0540

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

கந்தர் (அமரர்)

கதிர்காமர் (அமரர்)

வைரமுத்து (அமரர்)

கணபதிப்பிள்ளை (அமரர்)

அமரர்கள் சின்னத்தம்பி + செல்லாச்சிப்பிள்ளை

அரியமுத்து

அமரர்கள் செல்லத்துரை + ஆச்சிப்பிள்ளை

**செல்லத்துரை** + மனோன்மணி

தம்பிராசா (அமரர்) + பரமேஸ்வரி

இராசலிங்கம் (அமரர்) + இராஜேஸ்வரி (அமரர்)

கனகம்மா + செல்லத்துரை (அமரர்)

பொன்னுத்துரை (அமரர்) + பராசக்தி

சின்னத்துரை + இந்திராணி (அமரர்)

அமரர்கள் சிவபாக்கியம் + கதிரவேற்பிள்ளை

நல்லம்மா + இராசையா (அமரர்)

பூரணலெட்சுமி + செல்வரெத்தினம்

விக்னேஸ்வரி + தேவராஜா — யதுர்ஷன், யாழினி

ஜெயசீலன் + நித்தியதேவி — மிதுனன்

ஜெகதீஸ்வரி + உதயகுமார் — ஜனனி, ஜனகன்

கமலேஸ்வரி + தவராஜ் — மகீரன், யசீனா

சிவசீலன் + பாமினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதா உபதேசம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்தாய்
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையது.
மற்றொரு நாள்
அதுவே வேறொருவருடையதாகும்
'இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்'

-பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org